# விளம்பரம்™
# VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி VIII    MAY 01, 1998    பாலம் 09



## வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை




- ❊ பூகம்பம் ரொரன்ரோவில் ஏற்படுமா? (பக்கம் 2)
- ❊ உடலில் அணியும் உடையா? முகமலச்ச்சியா சிறந்தது (பக்கம் 6)
- ❊ சங்கடம் தரும் சனிபகவானே மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய் ! (பக்கம் 5)
- ❊ வீட்டில் ஏற்படும் சிறுசிறு திருத்த வேலைகள் உடன் திருத்த வேண்டுமா? (பக்கம்12)
- ❊ Air Bag இருப்பதால், சீட் பெல்ட் அணியாமல் விடலாமா? (பக்கம் 3)
- ❊ மாதாந்த காப்புறுதி பணத்தை கொடுப்பனவு செய்யாமல் விடுவதால் ஏற்படும் தீமை (பக்கம் 13)
- ❊ சி.பி, சி.மு அறிய ஆவலா? (பக்கம் 7)



## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ் ☎ (416) 267-8221



## SNR OPTICAL

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும்.

- அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி FRAME CONSULTANT (Robert Optician)

☎: (416)332 9995

## EZ DRIVING SCHOOL

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற



PL. CALL: JEYAKUMAR

(416) 283-4100

Cell: 822-6741

(9 வருட கால அனுபவ பயிற்சியாளர்)

## SINGAPORE PAGING



Motorola Brovo $39.00
NEC RELAY $39.00
MotorolaPronto $65.00
MOTOROLA EXTRA FLEX $99.00

மாதம் $5.95 மட்டுமே

- 12 மாதங்களுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்
- Pagerஐ கொள்முதல் செய்ய வேண்டும்
- 3மாத குத்தகையும் உண்டு (ஆரம்பத்தில்)
- ஸ்காபரோவில் கிளைகளும் உண்டு

விபரங்களுக்கு : Raj ☎: (416) 745-2378



## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer

தொடர்பு - கதிர்

☎: (416) 750-8118

2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON
SCARBOROUGH

## TUITION

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tuition சொல்லிக் கொடுக்கப்படும்

PL. CALL: 755-8034

## MOVING DELIVERY

- FOR SMALL OR BIG MOVING
- REASONABLE RATES
- RELIABLE SERVICES

☎: (416) 286-7562

CELLULAR PHONE: 562-7977

## RAAJ WATCH WORK

சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாவனம். NATHAN

☎: (416) 265-5580

2885 LAWRENCE AVE. EAST
BRIMLY/ LAWRENCE (Close to Biway)

## AIRPORT SERVICE & MOVING VAN

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய்வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு

☎: (416) 759-0557

## ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ்-☎ 261-6883

## சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்

TV, VIDEO, MICROWAVE OVEN, REMOTE CONTROL, AMPLIFIER

நியாயமான விலையில், தரமாகத் திருத்திக் கொடுக்கப்படும். (24 வருட அனுபவம்)

கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)

TEL: 438-9134

## K.S.M MOVING CHAIRS RENTAL SERVICE

கதிரைகள் வாடகைக்கு 50¢ (Pickup) கதிரைகள் விற்பனைக்கும் உண்டு. குறைந்த செலவில் Moving செய்து தரப்படும்.

☎: சிவா (416) 724-5171


அன்பான வாசகர்களிற்கு ! தரமான தகவல்கள், ஆக்கங்கள், கட்டுரைகளை விளம்பரத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்


## DR. B. B. Kalra


Family Physician - (குடும்ப வைத்தியர்)

3268 Finch Ave. E., Scarborough, Ont. (One Traffic light West of Warden)

Tel: (416) 492-9880

எங்களின் சேவைகள்

- வருடாந்த மருத்துவ பரிசோதனை
- குழந்தைப் பராமரிப்புக்கள்
- கர்ப்பப் பரிசோதனைகள்
- குடும்பக்கட்டுப்பாட்டு ஆலோசனைகள்
- பாலியல் நோய்க்குரிய சிகிச்சைகள்
- நோய்த் தடுப்பு ஊசிகள், E.C.G சோதனைகள்
- Allergy தடுப்பூசிகள் அவசியமேற்படின் வீட்டில் வந்தும் நோயாளிகளைப் பார்வையிடுவார்.




OHIP உள்ளவர்களுக்கு இச்சேவை இலவசம்

## சிவாகம கிரியா பீடம்



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD. SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (9) - விஜே குலத்துங்கம்



நம் இனத்தவரிடையே அண்மைக் காலமாக "பூகம்பம்" என்ற பீதி கிளப்பப்பட்டுள்ளது. ஆனால் இதைப்பற்றி மற்ற சமூகத்தினரிடையே இந்தப் பீதி இல்லை. ஏனெனில் தமிழ் தகவல் சாதனங்களே இப்படியான பீதியை கிளப்பி விடுகின்றன. சென்ற வருடம் டொரன்டோவில் பூகம்பம் என்ற கதை கிளம்பியது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் Ottawa Valley இலும், கியூபெக் மாகாணத்தின் சில பகுதிகளிலும் பூமியதிர்வு ஏற்பட்டது என ஆங்கில பத்திரிகைகளில் செய்தி வந்தது. உள்ளே சிறிய ஒரு செய்தியாக போடப்பட்டது. நமது தகவல் சாதனங்களில் முதன்மை செய்தியாக வெளியிடப்பட்டது. நம்மவரிடையே ஒரு பழக்கம் எந்தச் செய்தியையும் அரைகுறையாக, அதாவது தலையங்கத்தையும் முதல் பந்தியையும் மாத்திரமே படித்து விட்டு, அதைப் பெரிதுபடுத்துவதேயாகும்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் வந்த செய்தியை முழுமையாக படித்தவர்களுக்கு தெரியும் Ottawa Valley போன்ற இடங்களில் ஒரு வருடத்திற்கு பலதடவைகள் இந்த பூமியதிர்வு கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளது. ஆனால் இதன் அளவு 'Richter Scale' எனப்படும் அளவீட்டில் 4.0க்கு குறைவாக இருப்பதால் மனிதரால் உணரப்படுவதில்லை. ஆனால் விஞ்ஞான இயந்திரங்களினால் அவை பதியப்படுகின்றன. 4.0க்கு கூடுதலாக அதிர்வு இருக்கும்போது மனிதரால் உணரப்படுகின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடந்த அதிர்வு 4.1 எனவே மக்களால் உணரப்படுகின்றது. 4.1 க்கு அதிகமான அதிர்வு Ottawa Valley பகுதியில் வருடத்திற்கு ஓரிரண்டு தடவைகள் ஏற்படுகின்றது. எல்லா இடங்களிலும் பூமியதிர்வு ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் சில இடங்களில் அதன் அளவு அதிகமாக இருக்கும் போது மனிதரால் உணரப்பட்டும், மிகக் கூடியளவு இருக்கும்போது பாரிய அழிவுகள் ஏற்படுகின்றன. எனவே இந்த சம்பவத்தைப் பற்றி நாம் அலட்டிக் கொள்ள தேவையில்லை.

பூகம்பம் அல்லது நிலநடுக்கம் அல்லது பூமியதிர்ச்சி எனப் பல பெயர்களால் அழைக்கப்படும், ஆங்கிலத்தில் முறையே Earth Quake, Tremor என்று அழைக்கப்படும் இந்த நிகழ்வுகள் எவ்வாறு தோன்றுகின்றன எனப் பார்ப்போம்.

உலகில் சாராசரியாக ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 6000 பூமியதிர்ச்சிகள் ஏற்படுகின்றன. இவற்றில் 5000 மிகச் சிறியது அல்லது மக்கள் வாழும் இடங்களுக்கு தூரத்தில் இருப்பதாலும் இவற்றை உணரமுடியாது. நுண்ணிய விஞ்ஞான கருவிகள்தான் இவற்றைக் கண்டுபிடிக்கும். மிகுதி 500ல் 450 உணரப்படுகின்றது. ஆனால் பாதிப்பை அல்லது சேதங்களை ஏற்படுத்துவதில்லை. 35 சிறிய சேதங்களை உண்டாக்குகின்றது. மிகுதி 15 தான் உயிர் இழப்புகளையும், கட்டிடங்கள், வீடுகள் போன்றவற்றில் சேதங்களையும் உருவாக்குகின்றது.

பூமியின் மேற்பரப்பில் இருந்து 100 கிலோ மீற்றர் தடிப்பு அளவில் Lithosphere என்று அழைக்கப்படும் இலகுவில் உடையக்கூடிய பகுதியில்தான் பூகம்பம் அல்லது பூமியதிர்ச்சி உருவாகின்றது. Lithosphere என்ற பகுதி 12 தொடக்கம் 15 உறுதியான தகடுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்ச்சியாக, சுயாதீனமாக அசைந்து ஒன்றுடன் ஒன்று மோதியும் செயல்படுகின்றன. தகடுகள் ஒன்றுடன் ஒன்று மோதும்போது தகடுகளின் நடுப்பகுதியில் அவ்வளவு தாக்கம் ஏற்படுவதில்லை. தகடுகளின் எல்லைகளில்தான், தகடுள் மோதும்போது பெரிய பூகம்பங்கள் உண்டாகின்றன. எனவே இந்த தகடுகளின் மத்திய பகுதியில் இருக்கும் நாடுகளில் தொடர்ச்சியாக அதிர்வு ஏற்பட்டாலும் உணரப்படுவதில்லை. ஆனால் தகடுகளின் எல்லைகளுக்கு மேலாக உள்ள நாடுகளில் பெரிய அதிர்வுகள் ஏற்படுகின்றன. எல்லைகளிலும் குவியும் முனைகளுள்ள எல்லைகளில் மிகப்பெரிய தாக்கம் ஏற்படுகின்றது.

இப்படியாக தகடுகள் சந்திக்கும் எல்லைகளில் ஒன்று 40,000 கிலோமீற்றர் நீளத்தில் பசுபிக் சமுத்திரத்தை சுற்றி உள்ளது. இதில்தான் பூமியதிர்ச்சி அபாயம் உடைய ஜப்பான் மற்றும் வடஅமெரிக்காவின் மேற்குக் கரையிலுள்ள வன்கூவர், Alaska போன்ற நகரங்கள் உள்ளன. இப்படியான இடங்களிலேயே சாதாரணமாக பூமியதிர்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளன.
இதைவிட பூமியின் உட்பகுதியில் இருக்கும் மிகவும் வெப்பமும், அமுக்கமும் நிறைந்த தீக்குழம்புகளின் தாக்கத்தினைப் Lithosphere ல் இருக்கும் தகடுகளில் தாக்கம் ஏற்படுகின்றது. இந்த தகடுகளில் இப்படியாக தேங்கியிருக்கும் அழுத்த சக்தி அளவுக்கு மீறி தகடுகளை வெடிக்கச் செய்யும் போது பெரிய பூகம்பம் ஏற்படுகின்றது. இதுவே எதிர்பார்க்க முடியாத இடங்களிலும் பெரிய பூகம்பம் ஏற்படக் காரணமாகும். தகடுகளின் எல்லைகளின் வடிவம், அருகருகே அசையும் தகடுகளின் வேகம், தகடுகளின் கற்பாறைகளின் தன்மை ஆகியன பூகம்பங்களின் அளவையும், பருமனையும் தீர்மானிக்கின்றன.

பூகம்பம் Richter அளவீட்டால் அளவிடப்படுகின்றது. Richter அளவு 1இலிருந்து 10 வரை இருக்கும். '6'க்கு கூடுதலாக இருக்கும்போது அழிவுகள் ஏற்படும். பூகம்பம் வருவதை முன்கூட்டியே அறிய முடியாது. ஐந்து நிமிடங்களுக்கு முன்னதாக கூட அறியமுடியாது. ஆனால் பூகம்பம் நடக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களை இனங்காண முடியும். ஆனால் எப்போது வரும் எனக்கூற முடியாது. எதிர்பார்க்காத இடத்தில் கூட வரலாம். நிச்சயமாக வரும் என்று கூறப்படும் Japan, Vancouver போன்ற இடங்களிலும், மக்கள் சாதாரண வாழ்க்கையை நடாத்துகின்றார்கள். பெரிய கட்டிடங்களை கட்டி உள்ளார்கள். நான்கூட Japanல் 3 வருடங்கள் இருந்தேன். மூன்று வருடங்களில் பலநூறு தடவை பூமி அதிர்ச்சியை உணர்ந்து உள்ளேன். எனக்கு பயம் ஏற்பட்டாலும், ஜப்பானிய மக்கள் இதைப்பற்றி அலட்டிக் கொள்வதில்லை. வருவது வரட்டும் என்ற மன உறுதி கொண்டவர்கள் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். போலிகளையும் பீதிகளையும் நம்பி பயத்துடன் வாழ்பவர்கள் வாழ்க்கையில் பின்தங்கிய நிலையிலேயே இருப்பார்கள்.


புதிய நிர்வாகத்தின் கீழ்
Markham / Sheppard பகுதியில்
NEW SPICELAND
☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 84

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | ■ | ■ | 3 |
| | ■ | 4 | | | | | |
| | ■ | ■ | ■ | | ■ | ■ | |
| | | 5 | ■ | ■ | 6 | ■ | |
| | ■ | ■ | 7 | | | 8 | |
| | 9 | ■ | | ■ | 10 | ■ | ■ |
| ■ | ■ | | | 11 | ■ | | ■ |
| 12 | | 13 | | ■ | 14 | | |

**இடமிருந்து - வலம்**

1. அண்மையில் குளிர்கால ஒலிம்பிக் நடந்த இடம்
4. பண்டகசாலை
5. இசைபாடி உழைப்பவன் (வல-இட்)
7. வழி
9. படுப்பதற்கு உதவும் (வல - இட)
10. கடுமையான இருட்டை குறிக்கும் பெயர் எச்சம்
11. இருபொருட்களிற்கு இடையேயான ஒற்றுமையை குறிப்பது (வல-இட)
12. இராமாயணத்தில் மாயமானக வந்தவன்
14. வண்டி உருள உதவுவது

**மேலிருந்து கீழ்**

1. எள்ளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்
2. இலவம் மரத்தின் பழம்
3. பெருமையான தோற்றம்
4. உறக்கத்தில் தெரிவது (கீழ்-மேல்)
6. எண்ணெய் எடுக்க உதவும் இயந்திரம்
7. கண்ணன்
8. காதணி
13. பக்குவம் செய் (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் May 28, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும்.
Address: P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சூ | ரி | ய | கி | ர | க | ண | ம் |
| த் | ■ | ■ | ரீ | ■ | வி | ■ | ய |
| தி | ரா | வி | ட | ம் | ■ | மி | தி |
| ர | ■ | ■ | ம் | ■ | தர | ■ | த் |
| தா | ள் | ■ | ■ | கோ | பி | ■ | ர் |
| ரி | பு | ம் | ல | வ | ■ | ■ | ம |
| ■ | ■ | ட | ■ | ல | ■ | தி | சா |
| இ | ந் | தி | ர | ன் | ■ | பா | ■ |

**#83இல் வெற்றி பெற்றோர்**

1) L. Kumarasamy, Donmills
2) Sivakumar V., Toronto


நியூ ஸ்பைஸ்லாண்ட்
5800 Sheppard Ave. E.
Unit#16 Scarborough, Ont.

YARLCAN
STEAM CLEANING



Tel: (416) 724-9085 / Pager : 600 0335 / Cell: 315 0332

| | | | |
|---|---|---|---|
| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
| ல | யோ கா சோ தி ட ம் | (416) 299-8361 | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
| சுபமுகூர்த்தம் கணித்தல் | 10 | 9 | பலன் பார்த்தல் |



# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing


Prudential Dr.
Lawrence Av.
Midland Av.

Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] 285-4998

முகவரி: 2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT. (MIDLAND & LAWRENCE)

## <u>கனடாவில் சிறந்த சாரதியாவது எப்படி?</u> *(6)*



கடந்த இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குரிய விடை

<u>கேள்வி 6.</u>ற்குரிய பதில் *நீங்கள் வாகனத்தை ஓட்டிச்செல்லும் போது **SCHOOL BUS** மாணவர்களை இறக்குவதற்காக அதனுடைய மேலுள்ள சிகப்பு விளக்குகள் பிரகாசித்துக்கொண்டு நிற்கும் போது உங்கள் வாகனத்தை எப்போது நிறுத்த வேண்டும்?*

*(C) எந்த நேரத்திலோ அல்லது எந்தப் பக்கத்திலோ பாதை எவ்வளவு பிரிவுகளாகப் பிரித்திருந்தாலோ வாகனத்தை 20 மீற்றர் தூரத்தில் நிறுத்த வேண்டும்.*

<u>சீட்பெல்ட் அணிவது அவசியமானதா?</u> கடந்த இதழ் தொடர்ச்சி

சிலர் தங்களது வாகனத்தில் Airbag இருப்பதால் சீட்பெல்ட் அவசியமில்லையென்றே கூறுவார்கள். அது மிகவும் தவறானது. Airbag முன்பக்கமாக வாகனம் மோதும் போதுதான் பாதுகாகவல்லது. வாகனம் பக்கமாக மோதியோ அல்லது உருளுவதாலோ (Rollover) பாதுகாக்க முடியாது.

சில வாகனங்களில் தற்போது ஆசனத்தின் பிற்புறத்திலும் பக்கங்களிலும் தலையருகிலும் Airbag பொருத்துகிறார்கள் இந்த வகையில் பொருத்தப்பட்ட வாகனங்கள் ஓரளவு பாதுகாக்கவல்லது. அப்படியிருக்கையிலும் கூட அந்த தயாரிப்பாளர்கள் சீட்பெல்ட்தான் மிகவும் பாதுகாக்கக்கூடியது. சீட் பெல்ட்டை மிகவும் அவசியம் அணியும்படியே வேண்டுகிறார்கள்.

*(தொடர்ச்சி 16ம் பக்கம்)*


*We are entering 7 th year service in Scarborough.*



**Better Work ...**
**Less Money**

N.T.E Auto Inc.
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஒட்டோ இங்.

NTE AUTO INC.
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN

SHEPPARD AVE. E.
HWY 401
ELLESMERE RD.
MUNGAM GT.
BIRCHMOUNT RD.
KENNEDY RD.
NANTUCKET BLVD.
151 N.T.E AUTO INC. UNIT: 12
MIDLAND AVE.
LAWRENCE AVE. E.
WICKWARE GT.



குடும்ப பல்வைத்தியர்
**Family Dentist**
Dr. Mahin Pouyan

உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் Dr. Mahin Pouyan ஐ நாடுங்கள்

☎ (416) 225-5522
* ஞாயிற்றுக் கிழமைகளிலும்

263 Finch Ave. E. (Finch & Bayview), North York, Ont. M2N 4S1



Pillayar Traders

SRILANKAN . EAST & WEST INDIAN
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746


## விஷேச போட்டி இல. 73

சதுரப் பெட்டிகளில் காணப்படும் எழுத்துக்களைக் கொண்டு பல சொற்களை உருவாக்கலாம். அவற்றில் 15 சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | ரு | ச் | ன | ர | கை | உ | ஆ |
| ன | வ | இ | ய | ம | லி | மு | தா |
| மா | ர் | சி | கு | ஜ | ளி | றோ | மை |
| ள | கூ | டா | ண | ஒ | ம் | பை | ழ் |
| ரி | ட | பு | ஈ | ஏ | ந் | யூ | எ |
| வி | டு | அ | று | க | ப | ஊ | ழ |
| பா | ல் | ல | ட் | ரா | லா | கா | வு |
| தி | ன் | ற | து | கி | ப் | த | மை |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை May 13, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**<u># 72ன் விடைகள்</u>**

1. பிரான்ஸ், நாடுகள் 32,
இங்கிலாந்த, பெல்ஜியம், ஜப்பான், ஈரான், நோர்வே, ஜமேக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, சிலி, நெதர்லாந்து, சவுதி அரேபியா, ஒஸ்ரியா

பரிசு பெற்றோர்:

1) K.Thavaraja, Donmills
2) A. துவாரகா, Mississauga


**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:**ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

# ஆரோக்கிய வாழ்வு (9) - *N. செல்வசோதி*



## ஆஞ்சநேயர் ஆசனம்



இவ்வாசன நிலையைப் பக்கவாட்டில் பார்க்கையில் ஆஞ்சநேயர் (அனுமன்) அமர்ந்திருக்கும் தோற்றத்தை ஞாபகப்படுத்துவதால் "ஆஞ்சநேயர் ஆசனம் எனப்படுகிறது.

1. தரையில் வலது பாதத்தை நன்றாகப் பதித்தல்
2. இடது காலை பின்புறமாக தரைக்குச் சமாந்தரமாக நீட்டுதல்
3. கைகள் இரண்டையும் சேர்த்து தலைக்கு மேல் கொண்டுவருதல்
4. உடலைப் பின்புறமாக வளைத்தல்

## பலன்கள்

1. உடலின் முழு அங்கங்களுக்கும் சுறுசுறுப்பையும் புத்தினர்ச்சியையும் கொடுக்கிறது.
2. உடலுக்கு இளமைப் பொலிவைத் தருகிறது.
3. முதுகு வலிக்கும் மார்புவலிக்கும் நிவாரணம் அளிக்கிறது
4. கால்களில் வாத சம்மந்தமான நோய்கள் ஏற்படாது தடுக்கிறது.

## மாணவர்கள் கண்களைப் பாதுகாப்பது எப்படி?

இக்காலத்தில் முதலாம் வகுப்பில் படிக்கும் குழந்தைகள் முதல் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவ மாணவிகள் வரை அநேகமான பாடத்திட்டங்களினால் அதிகமாகப் படிக்கவேண்டியிருப்பதால் மின்விளக்கின் கீழ் பெரும்பகுதி பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது. அத்துடன் அடிக்கடி சினிமா பார்க்கின்றனர். இது தவிர வீதிகளில் செல்வதால் கண்களில் தூசி படிகிறது. சரியாகக் கண்களைப் பராமரிக்கக்கூடிய கரெட் (Carrot), முட்டைக்கோஸ் (Cabbage) உண்பது குறைவு. இதனால் அநேகமானோர் கண்ணாடி அணிந்து செல்வதைக் காணமுடிகிறது. பெற்றோர்களும் தமது குழந்தைகளுக்கு கண் கோளாறு ஏற்பட்டால் கண்ணாடி போட ஏற்பாடு செய்கிறார்களே தவிர மாற்று வழிகளை அவர்கள் சிந்தப்பதேயில்லை.

ஆகவே கண்களைப் பராமரிக் வேண்டும். காலை மாலை கீழ்வரும் பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

**பயிற்சிகள்** இரு கண்களையும் இடது பக்கம், வலது பக்கம் அசைக்க வேண்டும். பின் மூக்கு நுனியை உற்றுப் பார்க்க வேண்டும். இப் பயிற்சியை காலை, மாலை 10 முறை செய்ய வேண்டும். அத்துடன் இரு கைகளையும் கோர்த்து அதனுள் ஒரு சிறிய துவாரம் ஏற்படுத்தி அதனூடாக சூரிய ஒளியை காலை, மாலை 5 நிமிடங்கள் பார்த்து வரவேண்டும்.

இதன்பின் பஞ்சை குளிர்ந்த நீரில் நனைத்து மூடிய கண்களின் மடல்மேல் சிறிது நேரம் வைத்தால் நிச்சயம் கண் கோளாறுகள் நீங்குவதோடு கண்களும் பிரகாசமாகும். கண்ணாடி அணியத் தேவையில்லை. இரவில் அதிக நேரம் கண்விழித்து படிக்கும் போது நோவு, சோர்வு ஏற்பட்டால் ஐஸ் வாட்டரில் (Ice Water) பஞ்சை நனைத்து கண்களைில் 10 நிமிடம் வைப்பதால் கண்கள் ஒளிபெறும், சோர்வு நீங்கும். அதிக நேரம் படிக்கலாம்.


**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரகப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

**நீலம் சில்க்**

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 6வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும்

நீலம் சில்க்கின் 1998ம் ஆண்டிற்கான புதிய வருகைகள்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)



**யோகாசன வகுப்புக்கள்**

அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறு தோறும் காலை MARKHAM / ELLESMERE இற்கு அருகாமையில் அமைந்திருக்கும் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப்படுகின்றது.

மேலதிக தொடர்புகளுக்கு சத்தி : **291-5853**



*7 DAYS Open* நகரின் மத்தியில்

**GREAT ONE TEXT**



1368 QUEEN ST. WEST (QUEEN & BROCK)
TEL: (416) 588-7989

- சிறுவர்களுக்கான உடைகள்
- ஆண்கள், பெண்களுக்கான உடைகள்
- USA, LONDON, SINGAPORE பிடவைகள்
- எக்ஸ்பிரஸ் பணமாற்று சேவை
- 3வது வருடத்தில் கால்பதிக்கும் GREAT ONE TEXT

EVERY WEEK ARRIVAL



**கலைமகள் புத்தக நிலையம்**

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை


595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# நல்லெண்ணை - நல்ல எண்ணெயா?

-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



தண்ணீர் உலக வாழ்விற்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் எண்ணெயாகும். நம் பாவனையில் பலவிதமான எண்ணெய் வகையுண்டு. அவையாவன எள் எண்ணெய், பசு நெய், தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், புல் எண்ணெய், கடலை எண்ணெய், நோ எண்ணெய், ஆலிவ் எண்ணெய், மண்ணெண்ணெய், கறுவா எண்ணெய், கராம்பு எண்ணைய், செம்பனை எண்ணெய் (Palm Oil), இயந்திர எண்ணெய், புளி எண்ணெய், ஏலக்காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், மயிலெண்ணைய், புலியெண்ணெய், வெங்கனாந்தி எண்ணெய், கற்பூர எண்ணெய், வாதாம் எண்ணெய் (Almond) என்று இப்படியாக பலவிதமான எண்ணெய் வகையறாக்களை நாம் அன்றாட வாழ்க்கையிலே உபயோகப்படுத்துகிறோம்.

இந்த எண்ணெய் வகைகள் யாவும் உணவின் சுவையை கூட்டவும், உடம்பைக் குளிர்ச்சிப்படுத்தவும், வாய்வுத் தொல்லை, வாதம், நோவு இவற்றை குறைக்கவும் இரத்தத்தை மென்மையாக்கி, இரத்தோட்டத்தை துரிதப்படுத்தவும் என்ற இன்னோரன்ன இன்றியமையாத தேவைகளுக்கு மனித இனத்திற்கு மிகவும் உதவியாக உள்ளது என்பது உண்மை. ஆயுர் வேத, சித்த வைத்தியங்களில் இன்னும் எத்தனையோ இதில் குறிப்பிடப்படாத எண்ணெய் வகைகளை மூலிகைகளில் இருந்து காய்ச்சி வடித்துப் பயன்படுத்துகிறோம்.

இதில் இன்று நான் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட விசயம் எள் எண்ணெய் எனப்படும் நாம் அனைவரும் அன்றாடம் உச்சரிக்கும் நல்லெண்ணையே. நான் மேலே கூறிய எண்ணெய்கள், அந்த எண்ணெயின் மூலப் பொருளின் பெயரிலே அழைக்கப்படும்பொழுது ஏன் எள் எண்ணெய் மட்டும் நல்லெண்ணெய் என்று அழைக்கப்படுகிறது என்று என்றாவது ஒரு நாள் சிந்தித்துப் பார்த்தீர்களா? ஆம், நல்லெண்ணெய் உண்மையாக, சத்தியமாக, உறுதியாக நல்லவோர் எண்ணெயே. எவ்வித சந்தேகமின்றி நீங்கள் இதை நன்கு பயன்படுத்தலாம். இதை அன்றாடம் உபயோகப்படுத்துவதால் எவ்வித தீமையும் உங்களுக்கு ஏற்படாது, இது உறுதி. இந்த எண்ணெயில் உள்ள ஒரு தெய்வீக தன்மை என்னவென்றால் மற்ற எண்ணெய் வகைகள் உடலில் தேவையற்ற கொழுப்புச் சத்தை வளர்த்து உங்களை நோய்க்கு ஆளாக்கிவிடும். ஆனால் நல்லெண்ணெயோ அதற்கு மாறாக கொழுப்புச் சத்தை கரைத்து உடலை நூற்றாண்டு காலம் நோய் நொடி இல்லாது வாழவைக்கிறது. உங்களுக்கு இதில் சந்தேகமாயிருந்தால் மற்ற எண்ணெய் வகையுடன் நல்லெண்ணையையும் வெவ்வேறாக சிறுபோத்தல்களில் விட்டு உங்கள் குளிர்சாதன பெட்டியின் அதிகுளிரூட்டி (Freezer) பகுதியில் வைத்துப்பாருங்கள். அப்போ தெரியும் நல்லெண்ணெயின் அருமை. மற்ற எண்ணெய்கள் யாவும் கட்டியாய் போய்விடும் .ஆனால் நல்லெண்ணெய் மட்டும் கட்டியாய் போகாமல் இருப்பதை அறிவீர்கள். இந்த உண்மையை உங்கள் தாயகத்தில் நீங்கள் வாழும் போது பனிகாலங்களில் உங்கள் வீட்டு அடுக்களையிலே உள்ள தேங்காய், இலுப்பை, எள் எண்ணெய்களில் இவ்வுண்மையை கண்டிருப்பீர்கள்.

நல்லெண்ணெய் எனப்படும் எள் எண்ணெய், இது இன்று நேற்றல்ல புராண, இதிகாச, சங்க காலங்களிலேயே பாடல் பெற்ற பெருமைபெற்றது. இராமாயணத்திலே யுத்த காண்டத்திலே, யுத்த களத்தில் விபீசணன் கும்பகர்ணனை இராமன் பக்கம் அழைக்கிறான். அப்போ கும்பகர்ணன் தம்பி, நீ என்ன சொல்லி வாதிட்டாலும் நான் இராமன் பக்கம் வரமாட்டேன். கைலயங்கிரியையே அசைத்த என் அண்ணன் ஒரு மாவீரன் அவனை தனிமையிலே இறக்கவிடேன் நிச்சயம் நாம் இறப்போம். நீ, நாம் இறந்தபின் நம்மிருவருக்கும் எள்ளும் தண்ணீரும் இறைத்து ஆத்ம சாந்திக்கு வழி செய்வாய். இப்போ நீ சென்று வா என்று அனுப்புகிறான். இன்று நாம் பிறக்கும் குழந்தைகளுக்கும் முதலில் நல்லெண்ணெய் தடவி இளம் வெய்யிலிலே சிறிது நேரம் விட்டு தோய வார்க்கிறோம். இறந்த சடலத்திற்கு நல்லெண்ணெய் தேய்த்து அரப்பு, எலுமிச்சை வைத்து குளிப்பாட்டியே சுடுகாட்டிற்கு அனுப்புகிறோம்.

ஜோதிடத்திலே நல்லெண்ணெய் வகிக்கும் ஸ்தானம் மிகஉயர்ந்தது. எந்த கிரகத்துக்கும் இல்லாத வலிமை சனீஸ்வரனுக்கு உண்டு. ஒரு மனிதன் வாழ்வில், நாம் நம்புகிறோமோ இல்லை விரும்புகிறோமோ என்ற பாகுபாடின்றி திசை, புத்தி, அந்தரம், சூட்சுமம், பிராணன் என்று நம்மை அன்றாடம் ஆட்கொண்டோ அன்றி கண்டகச்சனி, அர்த்தாஸ்டமச்சனி, அட்டமச்சனி, ஏழரை சனி என்றோ எப்படியும் ஜனனம் முதல் மரணம் வரை சனீஷ்வரன் நம்மோடு பின்னிப் பிணைந்து, இணைந்து வாழ்கிறார். சனிக் கிரகத்திலிருந்து வெளிவரும் "மரீஷ் என்னும் ஒரு நச்சுவாயு நம் உடலைத் தாக்காது விடுவதற்கு கிழமைக்கு ஒரு தடவை அதுவும் சனிக் கிழமை எள்எண்ணெய் தேய்த்து முழுகுவதால் சனீஸ்வரன் அருள் பெற்று நீண்டநாள் உடல் சுகத்துடன் நிம்மதியாய் வாழலாம்.

இந்தப் பாடலைப் பாருங்கள் "அருக்கன் எண்ணெய் அழகழிக்கும் அணியாத் திங்கள் ஆகாது. திருக்மஞ் செவ்வாய் உயிர்போக்கும் செய்ய புதன் நற்பொருள் உண்டாம் கருத்தை அழிக்கும், **கவின் வியாழன் கைப்பொருள் போக்கும் கனவெள்ளி பொருத்தம் உண்டாம் <u>சனி எண்ணெய்</u> பேணிமுழுக வல்லாரே!**

இந்தப் பாடலைச் சற்று அவதானமாய் படியுங்கள். கருத்து நான் எழுதாமலே புரியும் இதில் முக்கியம் என்னவெனில் சனிக்கிழமை நல்லெண்ணெய் தேய்த்து முழுகுவது தான் சனிக்கு பிரீதியாகும். நீண்ட ஆயுளும், மன அமைதியையும் தரவல்லது சனீஸ்வரனே. முழுகுவதற்கு கூட ஒரு முறை உண்டு. சனிக்கிழமை முழுகும் போது காலையில் 10மணிக்கு முன்னால் குறைந்தது 3 மணித்தியாலமாவது (தலையிலிருந்து உள்ளங்கால் வரை உடலில் எல்லாப் பாகங்களிற்கும் இயன்றளவு குறைந்தளவு உடையுடன் நன்கு சூடேற தேய்த்து அப்புறம் 3 மணித்தியாலம் உடம்பில் நன்கு ஊறவிட்டு அதன் பின்பு பயறு, சீயக்காய், வெந்தயம், எலுமிச்சம் பழம் இவற்றை அவித்து அரைத்து 3 மணித்தியாலத்தின் பின் இளம் வெய்யிலில் முழுக வேண்டும். முழுகமுன்பு ஒரு எலுமிச்சம் பழத்தை வெட்டி தலையில் தேய்ப்பதால் பொடுகும், பித்தமும் போகின்றது. மற்றும் ஒரு முக்கியம் என்ன என்றால் முழுகும் போது கண்ணிற்குள் (ஒவ்வொரு) 5 சொட்டு நல்லேண்ணெய் துளியை, நன்கு செறியும்படி விடல் வேண்டும். விட்டால் தாங்கமுடியாத எரிவு தோன்றும். ஆனால் இதனை நீங்கள் பொறுத்தே ஆகவேண்டும். கண்ணில் இருந்து ஆறாக தண்ணீர் பெருகும் அதற்கு மேல் சளி இலகுவாக வெளியே வருகின்றது. இப்படிச் செய்வதால் பசடு அறவே நீங்குகிறது. கண்பார்வை கூடுகிறது. ஒற்றைத்தலைவலியும் நீங்குகிறது. மூளை மிகக்கூர்மையாக தொழில்புரிகிறது. சந்தோசமாக வாழ இலகுவான வழி இதுவாகும்.

நல்லெண்ணெய் முழுக்கே, இதில் மிக வேதனைக்குரிய தென்னவென்றால் தங்கள் வசதிக்கேற்றபடியெல்லாம் கண்ட நாளெல்லாம் முழுகுகிறார்கள். தலையிலே புண் என்றால் காலிலா மருந்து போடுவது. சனியற்ற மற்ற நாட்களில் முழுகினால் வீண் துயரை விலை கொடுத்து கொள்வனவு செய்தது போல்தான். சனிதோசமுள்ளவர்கள் எண்ணெய் முழுக்குடன் நான் கீழே எழுதும் மந்திரத்தை 21 தடவை தினம் உச்சரித்து சனீஸ்வரனுக்கு எள்எண்ணெய் எரித்து **"சங்கடம் தரும் சனிபகவானே மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்"** என்று மனம் உருகி வணங்குங்கள். நிச்சயம் வெற்றி கிட்டும்.
"நீலாஞ்சனை சமாபாசம் ரவி புத்ரம், ஜமாக் கிரசம், சாயா, மாத்தாண்ட சம்பூதம், தம்நமாமி, சனைச்சரம், லோகா சம்ஸ்தா, சுகினோபவந்து. என்னிடம் சனீஸ்வர தோசத்திற்கு பரிகாரம் கேட்டவர்களுக்கு நான் மேற்சொன்ன வழியையே சொல்லி பலர் இனிதே வாழ்கிறார்கள். அத்தோடு சனிபகவான் தோசத்திற்கு நளன் ஆறுதல் பெற்ற இடமாகிய சனீஸ்வரன் கோயிலுள்ள திருநள்ளாறு சென்று வழிபட்டு வருவீர்களானால் இனிதே வாழ்வீர்கள். ஒன்று சொல்கிறேன் சனீஸ்வரனைக்கண்டு பயப்படாதீர்கள். அவர் மிக நல்லவர். நீதிபதிகளுக்கெல்லாம் நீதிபதி. அவர் துலாத்தில் உச்சம் பெறுவதிலிருந்தே அறிவீர்கள். சனீஸ்வரனுக்கு மந்தன், [illegible], நீலன், முடவன், பங்கு, பாவநாயகன், கரியவன், சௌரி, முதுமகன், பங்கு, கலி, நித்யன், விதிரூபன் ,சனைச்சரன், நொண்டி, ஜடாதரன், சாயா புத்திரன், ரவிபுத்திரன், விதிரூபன், இப்படியாக 108 காரணப்பெயர்களை சனீஸ்வரன் கொண்டுள்ளார். சனீஸ்வரனுக்கு எவரிலும் தனிப்பட்ட கோபமில்லை. நாம் செய்த குற்றத்திலிருந்து சட்டத்தின் பிடியில் மண்ணைத்தூவி எப்படித்தப்பினாலும் எங்கும் போகாமல இவர் மடியில் விழுந்து தண்டனை பெறுகிறோம். அப்போ தண்டனை வழங்கும் சனீஸ்வரன் கெட்டவரென்றால் உலகத்தில் நீதிபதிகளெல்லாம் கெட்டவர்களா? இதிலிருந்து இவர் நீதிபதிகளுக்கெல்லாம் நீதிபதியென்பதில் இருவேறு கருத்து உண்டோ. கனடாவிலே என் புத்தூர் நண்பர் ஒருவர் வீட்டிலேயே அவர் மூன்று பிள்ளைகளும் சனிக்கிழமைகளில் நல் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதை கண்குளிர கண்டேன். வாயாரவாழ்தினேன். அந்தப் பிள்ளைகள் மிகச் சிறப்பாக நல்ல தேஜசுடன் திகழ்வதையும் கண்டேன். அந்த பெற்றோர் வாழ்க. உங்கள் பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு சனிக் கிழமையும் நல்எண்ணெய் தேய்து ஸ்நானம் செய்யுங்கள். நன்கு வளர்ந்து நோயின்றி படித்து அறிவுடன் அருளுடன் விளங்குவார்கள். நிச்சயம் கனடாவில் எண்ணெய் முழுக்கென்று கலங்காதீர்கள். துணிந்து சனிமுழுக்கு செய்து நற்பலனைப் பெறுங்கள். நல்எண்ணெய் தேய்த்து எந்த நாட்டில் முழுகினாலும் நிச்சயம் வெந்நீரிலே முழுகவேண்டும். முழுகும் நாள் கடின உழைப்பு, உடல்உறவு தவிர்க்க வேண்டும் கண்டிப்பாக. காரணம் நரம்பு மண்டலம் இளகிப்போயிருக்கும். இது முக்கியம்.

நல்லெண்ணெயிலே உயிர்ச்சத்து "A, D, E" நிரம்ப உள்ளது. காலையிலே எழுந்ததும் நல்லெண்ணெயிலே வாய்கொப்பளித்தால் ஒரு ஐந்து நிமிடம் வாயில் எண்ணெயை வைத்திருந்து நன்கு முரசுகளில் ஊறியதும் வெளியே உமிழ்ந்தால், எவ்வித நோயும் இன்றி வாழலாம். பற்கள் 100 வயதிலும் விழாது. பெலமாக இருக்கும். சோற்றிலே தாராளமாய் எண்ணெய் விட்டு சாப்பிடுங்கள். மன அமுக்கம் (Depression) நரம்புத் தளர்ச்சி, மலச் சிக்கல், தூக்கமின்மை, வயிற்றுப்புண், இரத்தக் கொதிப்பு வராது தடுக்கும். கொலஸ்ரோலைக் கரைக்கும் மருந்துகளில் முதல் தரமான அருமருந்து நல்லெண்ணைய். இது இரத்தத்தைச் சுத்திகரித்து கொலஸ்ரோலை அறவே நீக்கிவிடுகிறது. உள்ளியும் நல்லெண்ணெயும் தாராளமாய் உண்டால் கொலஸ்ரோல் யாவும் கரைந்து விடும். நீண்ட நாள் குழந்தையில்லாதவர்களிக்கு நிச்சயம் கற்பகூட்டை ஆற்றி கருத்தரிக்க வைக்கும். பெண்கள் பூப்படைந்ததும் கொடுக்கும் முக்கிய உணவுகளில் ஒன்று நல்லெண்ணெய் ஆகும். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் எல்லா உணவு விடுதிகளிலும் சூப் மற்றும் உணவு பதார்த்தங்களுக்கு (Sesame Oil) உபயோகிப்பர். அதாவது (Gingilly oil) இரண்டும் நல்லெண்ணையையே குறிக்கும். சுறாசெட்டை (Shark Fin) சூப்பிற்கு அடுத்த விலை கூடிய சூப் ( Sesame Oil Soup) ஆகும்.

இதுபற்றிய மேலதிக விபரம் வேண்டுவோர் தொடர்புகொள்ளுங்கள். C.S.S. Somasuntheram Tel: (416) 806-5896


## TAMIL INSURANCE CLAIMS CONSULTANT

## "தமிழில் இலவச ஆலோசனை"

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

- ✻ தகுந்த ஆலோசனை ✻ சட்ட உரிமைகள்
- ✻ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
- ✻ உரிய நஷ்டஈடு ✻ மற்றைய இழப்பீடு
- ✻ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும்

தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

**ரவி நடராஜா** (12 வருட காலம் அனுபவமுள்ளவர்)

தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555

FAX: (416) 245-7766

2095 Weston Rd., #201 (South of HWY 401), Toronto, Ont. M9N 1X7



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.




**குடிவரவு சட்டம் IMMIGRATION LAW**

- அகதி நிலை விண்ணப்பம்
- மேன்முறையீடு
- ஸ்பொன்சர்

**குற்றவியல் சட்டம் CRIMINAL LAW**

**விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS**

ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன். உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு



தொடர்பு கொள்ளுங்கள்.....> **எஸ்.கே. தீசன் (416) 631-6322**

5ம் ஆண்டு ஆரம்பம்

# J.A.B. TRAVELS & TOURS

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம் J.A.B TRAVELS & TOURS

**April 13Th To August 13Th**

இந்தகாலங்களில் ரிக்கற் வாங்குபவர்களின் பெயர்களை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு

* முதலாவது பரிசு - வீமான சீட்டு - **Florida**
* இரண்டாவது பரிசு - **Hotel for Two**
* மூன்றாவது பரிசு - **Dinner for Two**

IATA

**April 13Th To May 13Th**

மேலும் Ticket வாங்குபவர்களுக்கு ஒரு Loto 649 இலவசமாக வழங்கப்படும்

***Special Price***

* ***Colombo - Toronto - $1065*** **(One Way)**
* ***Colombo - Jaffna - $195*** &

**Ticket Arrangement & Defence Minister, Clearance Paper**ம் எடுத்துக் கொடுக்கப்படும்.

**Call J.A.B. Travels & Tours at: (905) 896-8320**

1185 DUNDAS ST. EAST, # 203 MISSISSAUGA ONT..


## அருள் விருந்து

1. எவனிடம் அருள் தாகமும் தியானமும் அதிகமாக இருக்கின்றனவோ அவன் ஈசுவரனை வெகு சீக்கிரத்தில் காண்பான்.
2. உலகத்தவர்க்கு நீ தொண்டனாகில் உலகத்தவர் உனக்குத் தொண்டன் ஆவார்கள்.
3. நீ உடலில் அணியும் உடையை விட மேலானது முகத்தில் அணியும் மலர்ச்சி.
4. நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள். மண்ணுலகில் நடமாடும் தேவதைகள் நாமே. பேரானந்தம் நமக்குச் சொந்தம். இதை உணர்தல் வேண்டும்.
5. தரித்திரத்துள் பெரிய தரித்திரம் அதிருப்தி. திருப்தியடைந்திருப்பவனே செல்வன்.
6. உடலின் தேவைகளைப் பெருக்குவதே கேடுகளை வளர்ப்பதற்கு முதற் காரணமாகிறது.
7. மனிதனுக்குத் தன்னைப் பற்றிய எண்ணமில்லாதிருக்கும் பொழுது அவன் மூலம் அரும்பெரும் செயல்கள் நிகழ்கின்றன. அப்பொழுது அவன் ஆதிக்கம் மிகப்படைத்தவனும் ஆகிறான்.
8. உள்ளத்தில் எழுகின்ற ஆசையானது தூயதாகவும் ஆழ்ந்ததாகவும் இருக்குமானால் அது நிச்சயமாகவே நிறைவேற்றப் பெறுகிறது. இது சான்றோர் அனைவருடைய அனுபவமாகும்.
9. மெய்ப் பொருளை அறிதற்கு உற்ற உபாயம் மிக எளியது என்றும் இயம்பலாம், கடினமானது என்றும் இயம்பலாம். ஆணவம் பிடித்தவனுக்கு அது இயலாத காரியம், குழந்தையின் பாங்குடையவனுக்கோ அது மிக எளிது.
10. அறிவு ஓங்குமளவு பேச்சு குறைகிறது. அறிவு இறைவனுடைய திருவடியை எட்டிவிட்டால் எஞ்சியிருப்பது மௌனம்.

*-செ. சிவசுப்பிரமணியம் Tel: 242-6400*


# PARAN

***PHOTOGRAPHY & PHOTO STUDIO***

திருமணம் மற்றும் சகல விழாக்களையும் சிறந்த முறையிலும் மலிவாகவும் புகைப்படங்களாக்கிக் கொள்ள பரன் போட்டோ

PARAN GEORGE: (416) 332-0733


**பரன் போட்டோ ஆதரவில் விளம்பரம் நடாத்தும் குறுக்கு எண் போட்டி - 19**

**இடமிருந்து வலம்**

a. விசர்நாய் கடி மருந்தைக் கண்டுபிடித்த லூயிபாஸ்டர் பிறந்த ஆண்டு
d. லீப்வருடத்தில் வரும் மாசிமாதம் இத்தனை நாள்
e. வாஸ்கொடகாமா பிறந்த ஆண்டு
g. அவசர அழைப்பு (Emergency) தொலைபேசி இலக்கத்தை மாற்றி எழுதினால் வரும் எண்
h. ஆருமுகநாவலர் மறைந்த ஆண்டு
f. வைர விழா கொண்டாடும் ஆண்டு

| | | | | |
|---|---|---|---|---|
| a | b | | c | ■ |
| ■ | | ■ | d | |
| e | | f | | ■ |
| ■ | ■ | g | | |
| h | | | | ■ |

**மேலிருந்து கீழ்**

a. மேலுள்ள இலக்கத்தையும் கீழுள்ள இலக்கத்தையும் கூட்டி இரண்டால் வகுத்தால் நடு இலக்கம் வரும்
c. 5 இலக்கத்தையும் கூட்டி தனிஇலக்கமாக்கும் போது வரும் எண் 5 ஆகும்.
f. 61 X 10 + 7

**#18ல் பரிசு பெற்றவர்**
Mr. N. Ganesh
Toronto, Ont.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 6 | 0 | 9 | ■ |
| 2 | ■ | ■ | 2 | 5 |
| ■ | 6 | 2 | 5 | ■ |
| 5 | 0 | ■ | ■ | 3 |
| 0 | 0 | 2 | ■ | 2 |

சரியான விடைகளில் ஒருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவரிற்கு பரன் போட்டோவில் பாவிக்கக்கூடிய $25 பெறுமதியான GIFT CERTIFICATE வழங்கப்படும். விடைகள் கிடைக்க வேண்டிய இறுதி May 13, 98. விடைகள் கிடைக்க வேண்டிய விலாசம் - P.O.BOX 37527, 31 TAPSCOTT RD, SCARBOROUGH, Ont. M1B 5P9

## அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

-வீணை மைந்தன்

# நான் வாழப் போகிறேன் (சுவடு 9)



1952ம் ஆண்டு வண்ணப் பட்டாசுகளும் மத்தாப்பு மின்னல்களும் வெடித்து ஒளி சிந்திய ஒரு தீபாவளி நன்னாளில் 'பராசக்தி' திரைப்படத்தின் வசனப் பட்டாசுகள் தமிழகமெங்கும் வெடித்துப் புரட்சி முழக்கமிடத் தொடங்கியது. அதுவரை திருமணம், திருவிழா, பொதுக்கூட்டம், கண்காட்சி போன்ற விழாக்கள் வைபவங்கள் எங்கும் திரைப்பாடல்கள் அல்லது சங்கீதப் பாடல்களே ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன.

கலைஞரின் வற்றாத தமிழூற்றில் பெருக்கெடுத்தோடிய உயிர்த்துடிப்பான புரட்சி வசனங்களை புது நாயகன் தமிழ்ச் செல்வன் சிவாஜி கணேசன் அவர்கள் உச்சரிக்கத் தொடங்கியதும் பாரதியின் முறுக்கு மீசைபோல் தமிழர்தம் முகங்களிலும் நெஞ்சங்களிலும் தமிழ் மீண்டும் உட்காரத் தொடங்கியது!

திரைப் பாடல்களும், கர்நாடக இசைப் பாடல்களும் ஒலித்த விழா மேடைகளிலும், வீடுகளிலும்..... " நீதிமன்றம் விசித்திரம் நிறைந்த பல வழக்குகளைச் சந்தித்திருக்கிறது. புதுமையான மனிதர்களைக் கண்டிருக்கிறது. ஆகவே இவ்வழக்கு விசித்திரமுமல்ல... வழக்காடும் நான் புதுமையான மனிதனுமல்ல.... " வாழ்க்கைப் பாதையிலே சர்வ சாதாரணமாகக் காணக்கூடிய ஜீவன் நான்.... என்று ஆரம்பிக்கும் பராசக்தி திரைப்பட வசனங்கள் தமிழ் மக்களின் இன்னொரு திருக்குறளாயிற்று!

அன்று முதல் தமிழர்கள், "தமிழுக்குக் குரல் வடிவமும் ஒலிவடிவமும் ஒழுங்காகக் கொடுத்துத்' தமிழ் முழக்கம் செய்யப் புறப்பட்டார்கள். நான் கூடப் பின்னாளில் தமிழ் அறிந்தபின் மனனம் செய்த இன்னொரு பதிகம் 'பராசக்தி' வசனங்களேயாகும்! எங்கள் வீட்டில் எனது தாயார் (நடிகர் திலகத்தின் பரம இரசிகை) பராசக்தி வெளிவந்த காலத்தில் பிரசவித்த எனது தங்கைக்குப் 'பராசக்தி' என்றே நாமம் சூட்டி மகிழ்ந்தார். அதுவரை உலகமாதாவின் பெயரைத் தெரிந்திருந்தும் தங்கள் வீட்டுப் பெண் குழந்தைக்குப் பராசக்தியெனப் பெயர் சூட்டியது மிக அரிது. விபரம் தெரிந்ததின் பின் 1952 - 1955ற்கிடையே தமிழர் இல்லங்களில் பிறந்த பல நூறு பெண் பிள்ளைகளுக்குப் 'பராசக்தி' பெயர் பிரபலமாயிற்று. இந்தப் பாதிப்பை ஏற்படுத்தியவர் கலையுலகில் முதல் மரியாதைக்குரிய பெரியவர் நடிகர் திலகம் அவர்களே!

'டாக்டர்' பட்டத்திற்கு யாராவது சிவாஜி அவர்களை மூலமாக எடுத்துக் கொண்டால் 'பராசக்தி' திரைப்படத்தை மாத்திரம் தெரிவு செய்து அக்கு வேறு ஆணிவேறாக வெவ்வேறு தலைப்புக்களில் கட்டுரை எழுதலாம். 50களில் தமிழ் நாட்டின் அரசியல்-சமூக-குடும்ப நிலை, இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பாதிப்பு - தாய்மை - பெண்ணுரிமை - தொழில் வளம் - மூடபக்தி - பகுத்தறிவு - வாதம் - சகோதர பாசம் - நீதி -நிர்வாகம் - ஏமாற்று வித்தை - மொழி வளர்ச்சிக்கு என்று பல்வேறு கோணங்களில் பராசக்தி திரைப்படத்தை ஒரு சமூகவியல் பாடமாக எடுத்து ஆராய்ச்சி செய்யலாம்.

திரை உலகில் சி.பி. (சிவாஜிக்குப் பின்பும்) சி.மு. (சிவாஜிக்கு முன்பு) அன்று காலத்தைப் பிரித்து வரலாறு எழுதுவதற்கு ஆரம்ப பைபிளாக விளங்குவது 'பராசக்தி' திரைக் காவியம். தமிழர்கள் குடும்ப உறவில் தங்கை பாசத்திற்குத் தனி வரைவிலக்கணம் வகுத்தவர் நடிகர் திலகம் அவர்களேயாகும். அவர் நடித்த திரைப்படங்களில் தங்கை பாசத்தைக் கருப்பொருளாக வைத்து எடுத்த படங்களின் வெற்றியையும் விமர்சனத்தையும் உற்று நோக்கினால் இந்த உண்மை புலப்படும்.

பராசக்தி முதல் பாசமலர் வரை அவர் தங்கை பாசத்தைப் பிரதிபலித்ததின் பாதிப்புக்களின் வடிவங்களே பின்னாளில் வெளிவந்து பிற நடிகர்கள் பங்கேற்ற பல திரைப்படங்களாகும். உதாரணமாக இன்றைய இயக்குநர் சேரனின் 'பொற்காலம்' வரை தங்கை பாசத்தின் பிரதிபலிப்பேயாகும்.

பராசக்தி திரைப்படத்தில் வழக்குமன்றக் காட்சி முக்கியமான தொன்றாகும்! படத்தின் உச்சக்கட்டமே அதுதான்.
குணசேகரன் (சிவாஜி) தங்கையைப் பற்றிக் கூறுவார். "....காணவந்த தங்கையைக் கண்டேன் கண்ணற்ற ஓவியமாக. ஆம் கைம் பெண்ணாக தங்கையின் பெயரோ கல்யாணி, மங்களகரமான பெயர்! ஆனால் கழுத்திலோ மாங்கல்யம் இல்லை...." என்று அண்ணன் குணசேகரன் நீதிமன்றத்திலே சொல்லும் போது அவருடன் இணைந்து அழுத அண்ணன்மார்களும், தங்கைகளும், தாயார்களும், ஏராளம், ஏராளம்!

"வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினான்" என்ற கலைஞரின் வசனத்தொடர் இன்றும் கூட தமிழ் அறிந்தவர்களின் மன நிலைக்கேற்றவாறு பேசப்படும்.
"தமிழ் மொழித் தொடராகிறது."
இவ்விதம் "சிவாஜி" என்ற மேதை தமிழர்களைத் தமிழ் பேச வைத்த தொடர்கள் பலவாகும்.! இந்தத் தொடர்களைப் பேச வைத்த படங்களாகப் 'பராசக்தி', 'மனோகரா' 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'திருவிளையாடல்' போன்ற திரைச்சித்திரங்களைக் குறிப்பிடலாம்.

இப்படங்களின் மூலம் தமிழர்களை மாத்திரமல்ல புதுமுக நடிகர் தேர்வில் தனது பாணியையே இன்றும் பேசவைக்கும் தமிழ் ஆசானின் உச்சரிப்பை நாவன்மையை 'சிவாஜித் தமிழ்' என்று பெருமையுடன் கூறுவேன்.

*சுவடுகள் தொடரும்.....*


**IMMIGRATION CONSULTANT**

Christina Staden, M.A.

Member of the Association of Immigration Counsel of Canada

18 years experience

**Free assessment, LOW COST, money back guarantee***

Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0307

9AM.-9P.M.

**பூச்சிகளை அழிக்க வேண்டுமா!!**


உங்கள் வீடுகளில் காணப்படும் பூச்சிகள், எலிகளை அழிக்க வேண்டுமா? உடன் தொடர்பு கொள்ளுங்கள்

(416) 750-1012 / (905) 839-2966 Car Phone: (416) 617-8717

**Gamini Wanigasekera**

Barrister Solicitor

& NOTARY PUBLIC (ONTARIO)
BARRISTER-AT-LAW (ENGLAND)
ATTORNEY-AT-LAW (SRI LANKA)



காணி, நிலம் - வாங்க, விற்க, அடமானம்
வியாபாரம் - வாங்க, இணைத்தல்
குடும்பச் சட்டம் - பிரிவு, விவாகரத்து
குற்றச் சட்டம் - மது சம்பந்தமான குற்றம்
சொத்து - கடைசி உயில்

இவை சம்பந்தமான சேவைகள் சிறந்தமுறையில் வழங்கப்படும்

**REAL ESTATE** - Buying, Selling &Mortgaging of Homes
**BUSINESS** - Purchase of Businesses & Incorporation, Power of Attorney & Affidavits
**CRIMINAL LAW** - Impaired Driving & Criminal Code Offences
**FAMILY LAW** - Divorce, Separation, Agreements & Custody
**LAST WILLS** - Probate in Canada & SriLanka
**IMMIGRATION** - Refugee Applications

Tel: (416) 449-4294 Fax: (416) 449-4369

*All Languages Spoken*

75 The Donway West, Suite 600, Donmills, Ontario, M3C 2E9

மலிவு விலையில் பெரும் சாதனை படைத்த பஞ்சுளா பஷனின் 5வது ஆண்டு நிறைவு விழாவையும்
6வது பிறந்ததின விழாவையும் முன்னிட்டு ரொரன்ரோ மாநகரம் இதுவரை கண்டிராத

# மஞ்சுளா பஷன்

வழங்கும்

# மாபெரும் மலிவு விற்பனை

**மே 1ம் திகதி - மே 30ம் திகதி வரை**
**காலை 11மணி - இரவு 10மணி வரை**

*1998ம் ஆண்டிற்கான புதிய டிசைன்களில் பேபி சாலினி சூட், பஞ்சாபி சூட், கராசூட், நக்மா சூட், சோலி இவைகள் நேரடித் தெரிவுகளுக்கு பம்பாய், டில்லி ஆகிய இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. மஞ்சுளா பஷனை விட எங்காவது பொருட்கள் மலிவு விலையில் கிடைத்தால் பணம் மீளளிக்கப்படும்.*

## மங்கையர்களிற்கான மங்கள உடைகள்

| சேலைகள் | நடைமுறை விலை | | நம்பமுடியாத விலை |
|---|---|---|---|
| கௌரி, காயத்திரி (ஒரிஜினல) | 175.00 | from | 100.00 |
| கோலம், றங்கோலி, அபூர்வா | 250.00 | | 150.00 |
| பனாரஸ் புதிய டிசைன் | 200.00 | from | 99.00 |
| மைசூர் சில்க் | 100.00 | from | 40.00 |
| கோபுரா சேலை | 40.00 | | 25.00 |
| நக்மா சேலை | | from | 40.00 |
| தஞ்சூர் சில்க | 100.00 | | 60.00 |
| தூய காஞ்சிபுரம் | 1000.00 | | 450.00 |
| காஞ்சிபுரம் சாறி | 200.00 | | 99.99 |
| கொட்டன் சாறி | | from | 15.00 |
| காதல்கோட்டை, கள்வன்சாறி | 40.00 | | 19.99 |
| சற்றின் சில்க் பிளேன் சாறி | 40.00 | | 19.99 |
| பிளேன் பட்லி சாறி with Blouse pcs | 40.00 | | 19.99 |
| நைலெக்ஸ் சாறி | 40.00 | | 19.99 |
| பட்டர பிளை சா[illegible] | 40.00 | | 19.99 |
| சற்றின் சாறி with Blouse | 50.00 | | 29.99 |
| கற்பிணிகளிற்கான கர்ச்சிதமான உடைகள் | | | 14.99 |
| இந்தோனேசியா பற்றிக்கவுண் பெரியது | 25.00 | | 15.00 |
| இந்தோனேசியா பற்றிக்கவுண் சிறியது | 20.00 | | 12.00 |
| சிறீலங்கா பற்றிக்கவுண் | | from | 10.00 |
| சிறீலங்கா பிறசியர் | 10.00 | | 5.00 |
| Blouse துணி 2X2 | 4.99 | | 3.49 |
| லைனிங் துணி | 2.99 | | 1.49 |
| England Skirt &Blouse | 75.00 | | 49.99 |
| பஞ்சாபி சூட் 3pcs | 40.00 | | 24.99 |

## சிறுவர்களிற்கான சிங்கார உடைகள்

| ஆடைகள் | நடைமுறை விலை | | நம்பமுடியாத விலை |
|---|---|---|---|
| பாவாடை தாவணி 4pcs | 50.00 | | 29.99 |
| பாவாடை தாவணி காஞ்சிபுரம் தைத்தது | 75.00 | | 39.99 |
| England Girls Dress | 75.00 | | 39.99 |
| பாவாடை சட்டை | | from | 14.99 |
| நக்மா சூட் | | from | 34.99 |
| England New Born Dress | 25.00 | | 14.99 |
| Boys மடிசார் சூட் | 34.99 | | 19.99 |
| Boys Shirts | 14.99 | | 4.99 |
| Boys Pants England | | | 9.99 |
| Boys Set | | from | 19.99 |
| Boys England Suits Sets | | from | 29.99 |
| England விஜய் Boys Sets | 99.99 | | 64.99 |

| | | | |
|---|---|---|---|
| **Welcome Set** | **20.00** | | **9.99** |
| **மணவரைவேசை விரிப்பு கம்பளம்** | **30.00** | **from** | **17.99** |

**இன்னும் பலப்பல தெரிவிற்கு நாடுங்கள் மஞ்சுளா பஷன்**



**மணமகனிற்கு தேவையான தலைப்பாகை, சர்வாணி சூட், வாடகைக்கு கொடுக்கப்படும்**

## இந்தியா விலையை விட குறைந்த விலையில் எவர்சில்வர் பொருட்கள்

| | நடைமுறை விலை | | நம்பமுடியாத விலை |
|---|---|---|---|
| நிறைகுடம் set 9pcs | 39.99 | | 24.99 |
| சாப்பாட்டு தட்டு பெரியது | 7.00 | | 2.99 |
| இட்டலி குக்கர் பெரியது | 35.00 | | 22.00 |
| இட்டலி குக்கர் சிறியது | 30.00 | | 20.00 |
| செம்பு | 7.00 | | 3.99 |
| அடுப்பு வளையம் | 4.00 | | 1.99 |
| சொதி வாளி | 8.00 | | 3.99 |
| ஐஸ்கிறீம் Cup | 3.00 | | 1.49 |
| தண்ணீர் டம்ளர் பெரியது | 3.00 | | 0.99 |
| ஸ்ரீமர் 3pcs | 35.00 | | 24.99 |
| கறிசமைக்கும் சட்டி 2pcs | 30.00 | | 16.99 |
| கறிக்கிண்ணம் 24pcs | 75.00 | | 49.99 |
| கறிக்கிண்ணம் 10pcs | 35.00 | | 22.99 |
| இட்டலி பானை பெரியது | 40.00 | | 24.99 |
| இட்டலி பானை நடுத்தரம் | 35.00 | | 22.99 |
| இட்டலி பானை சிறியது | 30.00 | | 19.99 |
| புட்டுப்பானை பெரியது | 15.00 | | 7.99 |
| புட்டுப்பானை பிடியுடன் | 25.00 | | 14.99 |
| தேங்காய் துருவி | 25.00 | | 12.99 |
| ஆலாத்தி எடுக்கும் தட்டு | 15.00 | | 7.99 |
| அப்பச் சட்டி (கொப்பர் ) 2pc | 30.00 | | 14.99 |
| கொழுக்கட்டை பற்றீஸ் அச்சு | 25.00 | | 14.99 |
| பலகார அச்சு 15 சில்லுடன் | 3.00 | | .49 |
| காமாட்சி விளக்கு | 10.00 | from | 4.99 |
| கழுத்து இறுக்கு கறுப்பு மாலை | 5.00 | | 1.99 |
| Tray வகைகள் | | | 3.99 |
| கரண்டி வகைகள் | | from | 0.99 |
| தேனீர் ஆற்றும் கிண்ணம் பெரியது | | from | 5.99 |

* இலவசம்* *இலவசம்*
**$300**க்கு மேல் கொள்முதல் செய்யும் வாடிக்கையாளரிற்கு
**$40.00**
பெறுமதியான கோபுரா சேலை இலவசம்
(3நிறத் தெரிவு உண்டு. றோஸ், பச்சை, நீலம்)

## ஆண்களிற்கான அம்சமான உடைகள்

| உடைகள் | நடைமுறை விலை | நம்பமுடியாத விலை |
|---|---|---|
| பட்டு வேட்டி சால்வையுடன் | 40.00 | 24.99 |
| பட்டு வேட்டிக்குரிய சேட் | 30.00 | 19.99 |
| மாறுகரை வேட்டி சால்வையுடன் | 60.00 | 39.99 |
| குருத்தா Set 2pcs | 30.00 | 19.99 |
| தூய வெள்ளை பொலியஸ்ரர் வேட்டி சால்வையுடன் | 30.00 | 19.99 |
| சாரம் | 10.00 | 4.99 |
| England Shirt | 25.00 | 14.99 |
| England Pants | 50.00 | 29.99 |
| T-Shirts | 20.00 | 14.99 |
| England **T-Shirt** | 30.00 | 19.99 |
| Shirts | 30.00 | 19.99 |
| தூய பட்டுவேட்டி சால்வையுடன் | 150.00 | 99.99 |

**5818 Sheppard Ave. East , #203**
**Scarborough, Ont. (Markham / Sheppard)**
**Tel. (416) 297-9875**



# யாதும் ஊரே யாவரும் கேளிர்



- எஸ். கே. தீசன்


## அவன் நினைத்தானா இது... நடக்குமென்று



> வேலைக்கு நடந்து போகும் பொழுது கார் அடித்து விட்டதாம்.
> பஸ்ஸில் போகும் போது விழுந்தவராம். பின்னால் வந்த கார் இடித்து கழுத்துக்குள் நோகுதாம்.
> பார்சல் டெலிவரி செய்யும் பொழுது வீட்டு வாசலில் சறுக்கி விழுந்து விட்டாராம்



> பக்கத்து வீட்டு நாய் கடித்து விட்டதாம்.
இது தினம் தினம் யார்மூலமாவது கேட்டு புளித்து விட்டது.
ஆனால் இதற்கு பதில்????



விபத்து நடந்த உடன் வைத்தியசாலைக்கோ.... வைத்தியரிடமோ... செல்வதில்லை. காப்புறுதி நிறுவனத்தினர் தொலைபேசியிலோ நேரடியாகவோ தொடர்பு கொள்ளும் பொழுது உரிய தகவல் தெளிவாகக் கொடுப்பதில்லை.வேலை செய்த விபரம், சம்பளத் தொகை அல்லது சொந்தத் தொழில் செய்பவரானால் உரிய கணிப்புடன் கணக்கு சமர்ப்பதில்லை நோவுடனும் வலியுடனும் பலர் தொடர்ந்தும் வேலைக்கு செல்கின்றனர். உரிய தகவல் விளக்கமாக அளித்தால் தான் உரிய நிவாரணம் கிடைக்கும்.

எனவே விபத்து நடந்த உடன் உரிய ஆலோசகரை நாடுங்கள்.
சட்டம் சரியாக தெரியாவிட்டால் உரிய ஆலோசனை பெறாவிட்டால் உபத்திரவம் உங்களுக்குத்தான் -எஸ். கே. தீசன்

### படைத்தானே... மனிதனை ஆண்டவன் படைத்தானே 0/100



**ஒருவர்:** அக்ஸிடென்ட் நடந்து 4 மணித்தியாலமா எனக்கு அறிவு வரவேல்லை

**மற்றவர்:** பரவாயில்லை எத்தனைபேர் பிறந்து 35, 40, வயதிலும் அறிவு வராமலிருக்கினம்.

(கலகலப்பு தீசன்)


# SCARBOROUGH NISSAN

NISSAN

SALES - SERVICE - PARTS - BODY SHOP

